செ.வெ.எண்: 16/செப்டம்பர் நாள்:08.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு வைரஸ் காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேலும் துரிதப்படுத்தி, பொதுமக்கள் நலனை உறுதி செய்திட வேண்டும்

## மாவட்ட கணிப்பாய்வு அலுவலரும் தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை செயலருமான டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தல்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.09.2017) நடைபெற்ற அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டத்தில், மாவட்ட கணிப்பாய்வு அலுவலரும் தமிழ்நாடு அரசு வருவாய்த்துறை செயலருமான டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / வருவாய்த்துறை அரசு செயலர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு பொதுமக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அரசின் திட்டங்கள் அனைத்தையும் பொதுமக்களுக்கு முழுமையாக கொண்டு சேர்ப்பதே ஒவ்வொரு அரசு அலுவலரின் தலையாய கடமையாகும். அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தில் டெங்கு போன்ற வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது அவசியமாகும். குறிப்பாக ஏடிஸ் கொசுப்புழு உற்பத்தியினை கட்டுப்படுத்துதல், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தப்படுத்துதல், பொதுமக்கள் வசிப்பிடங்களின் சுற்றுப்புறங்களை தூய்மையாக பராமரித்தல், வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான நடைமுறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்திட வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தற்போது டெங்கு வைரஸ் காய்ச்சலானது முழு கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த கட்டுப்பாடான நிலையினை தொடர்ந்து நிலைநிறுத்திட ஏதுவாக மாவட்டத்தில் உள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி என அனைத்து பகுதிகளிலும் அந்தந்த துறை சார்ந்த அலுவலர்கள் பொது சுகாதாரத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து இத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருந்துகள் , மாத்திரைகள் மற்றும் நிலவேம்பு குடிநீர் கரைசல் ஆகியவற்றை போதிய அளவு இருப்பு உள்ளதை உறுதி செய்திட வேண்டும். மேலும் இதுபோன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக வட்டார மருத்துவ அலுவலர்கள் தலைமையில் மொத்தம் 76 கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு டெங்கு வைரஸ் காய்ச்சல் ஏற்படாத நிலையினை உறுதி செய்திட வேண்டும்.

அதேவேளையில் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகத்தில் தனிக்கவனம் செலுத்தி பொதுமக்கள் சிரமப்படாத வகையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 429 ஊராட்சிகள், 2306 குக்கிராமங்கள் உள்ளன. சமீபத்தில் ஏற்பட்ட கோடை வறட்சி காலத்தில் குடிநீர் பற்றாக்குறையினை ஈடுசெய்திட ஏதுவாக மொத்தம் 1391 புதிய தற்காலிக குடிநீர் ஆதாரங்கள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு சுமார் 35 முதல் 40 MLD அளவு தண்ணீர் கிடைக்கப்பெறுகின்றது. இதனை பொதுமக்களின் தேவைக்கேற்ப சுழற்சி முறையில் விநியோகம் செய்து அனைத்து பகுதி மக்களுக்கும் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் குடிநீர் விநியோகம் செய்வதை உறுதி செய்திட வேண்டும்.

மேலும் வேளாண்மை பணிகளைப் பொறுத்த வரையில் பாரத பிரதமரின் புதிய பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் நெற்பயிருக்கு பயிர்காப்பீடு செய்துள்ள 1,27,132 விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு இழப்பீட்டுத் தொகையாக ரூ.355.28 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.354.24 கோடி

மதிப்பில் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் நுண்ணீர் பாசன திட்டம், சோலார் பம்ப் செட் அமைப்பதற்கு மானியம் வழங்கும் திட்டம் உள்பட அனைத்துத்துறைகளின் மூலமாக செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள்நல திட்டங்களை எவ்வித சுணக்கமுமின்றி சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / வருவாய்த்துறை அரசு செயலர் டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் / வருவாய்த்துறை அரசு செயலர் டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் தனுஷ்கோடி, அரிச்சல்முனை ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எஸ்.எஸ்.தனபதி, வருவாய் கோட்டாட்சியர்கள் (இராமநாதபுரம்) செல்வி.ரா.பேபி, (பரமக்குடி) திரு.அமிர்தலிங்கம், கால்நடைப்பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மரு.தி.மோகன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.தினகரன்,ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.ஆ.செல்லத்துரை, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திருமதி.ப.மாரியம்மாள், துணை இயக்குநர்கள் (பொது சுகாதாரத்துறை) மரு.குமரகுரு, மரு.மீனாட்சி உள்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**